NOVEMBER/DECEMBER 2025

23PTA12 — அறஇலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.



1. புதிய ஆத்திச்சூடி நூலின் ஆசிரியர் யார்?

2. திருவள்ளுவர் கூறும் மனிதனது ஏழ்பிறவிச் செல்வம் எதுவெனக் கூறுக.

3. கேண்மை என்பதன் பொருள் தருக.

4. பண்பிலான் பெற்ற செல்வம் எத்தமையது எனக்குறிப்பிடுக.

5. நாலடியாரின் ஆசிரியர் பெயரைக் கூறி, அதன் பகுப்பினைகத் தருக.

6. நாலடியார் உணர்த்தும் கருத்தினைக் குறிக்க.

7. பொறையுடைமை என்பதன் பொருள் தருக.

8. நாலடியார் கூறும் கற்றவர் நட்பிற்கு விளக்கம் தருக.

9. திரிகடுகம் உரைக்கும் மருந்தின் பெயர்களை குறிப்பிடுக.

10. கற்றார்முன் கல்வி உரைத்தல் என்னும் இனியவை நாற்பது பாடல் கூறும் கருத்து யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நீதி நூல்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருக்குறள் - கல்வி அதிகாரச் செய்திகளைத் தொகுக்க.

12. (அ) திருவள்ளுவர் உரைக்கும் கூடா நட்பினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பண்புடைமைச் செய்திகளைப் புலப்படுத்துக.

13. (அ) நாலடியார் - நூற்குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நாலடியார் வகுக்கும் கல்விக் கருத்துக்களை எழுதுக.

14. (அ) கூடா நட்பு குறித்து சமணமுனிவர்கள் உரைப்பதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) நன்றியில் செல்வம் - அதிகாரச் செய்திகளைத் தொகுக்க.

15. (அ) ஆசாரக்கோவை விளக்கும் ஒழுக்கங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) இன்னாநாற்பதின் வழிக் காணலாகும் இன்னாத கருத்துக்களை எடுத்துரைக்க.

Shanmuga Industries Arts & Science College T.V.Malai

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி.

16. நீதி நூல்கள் உரைக்கும் அறக்கருத்துக்களை ஆராய்க

17. வினைத்தூய்மை, வினைசெயல் வகை அதிகாரச் செய்திகளை கட்டுரைக்க.

18. நாலடியார் பொருட்பால் அதிகாரங்களைப் பற்றி மதிப்பிடுக.

19. பழமொழிநானூற்றின் - பழமொழிக் கருத்துக்களின் தன்மையை விவரிக்க.

20. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் குறித்து கட்டுரைக்க.

———————